# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற அவசரக் கூட்ட அறிவிப்பு

2023–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 03–ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி }<br>நாள் : 02.02.2023 }

தலைவர்,<br>நகர் மன்றம்.

## பொருள்

(1) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–இன் கீழ், வீட்டு வசதி வாரியப் பகுதியில் முழு அரசு மான்யம் ரூ. 48.00 இலட்சத்தில் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கும் பணி முடிவுற்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரால் 28.01.2023–ஆம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்காவினை தினந்தோறும் பராமரிக்க வேண்டியுள்ளது. பராமரிப்புப் பணிகள் துறை மூலமாக அல்லது சுய உதவிக் குழுக்கள் மூலமாக பராமரிப்பது தொடர்பாக மன்றத்தின் ஆலோசனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

பூங்காவை தினசரி பராமரிப்பு செய்வதை மன்றம் ஆலோசனை செய்து முடிவு செய்யலாம்.

(இ1/3707/21)

## தீர்மானம் எண். 277

1, தினசரி காலை 5.30 மணி முதல் 9.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 7.30 மணி வரையிலும் தவறாமல் திறந்து வைக்கவெண்டும். பின்னர் பொதுமக்கள் வெளியேறியவுடன் பொது இடங்கள், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள், கழிப்பிடங்கள்அனைத்தும் பாதுகாப்பாக உள்ளதை உறுதி செய்யவேண்டும்.

2. பூங்காவிற்கு நடைபயிற்சி மற்றும் உடற்பயிற்சிக்காக வரும் வரும் பொதுமக்களிடம் மிகவும் கண்ணியத்துடனும் மரியாதையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

**3**, பூங்காவிற்குள் குடிபோதையில் வரும் நபர்களையும், தொற்று வியாதி உள்ளவர்களையும் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது.

**4.** பூங்காவிற்குள் உள்ள அனைத்து உடற்பயிற்சி உபகரணங்கள், அலங்கார மின்விளக்குகள் மற்றும் இதர பொருட்களை எவ்வித சேதாரமும் ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டும்.

**5.** பூங்காவிற்குள் உள்ள அனைத்து செடிகளையும் தினசரி தண்ணீர் ஊற்றி பாதுகாப்பாக வளர்க்கவேண்டும்,

என்ற நிபந்தணைகளின் அடிப்படையில் நகராட்சி பூங்கா காவலர் மூலம் பராமரிப்பு செய்பராமரிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டது.

ஒம்/— இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.